# 18. நேர மதிப்பீடுகள்

இது 1988-இல் நடந்த கதை. இந்தியாவில் தனி நபர்க் கணினிப் பயன்பாட்டிற்கு வந்து ஐந்து வருடங்கள் ஆகி இருந்தன, வியூக மேலாண்மையின் பேராசிரியரான ஜம்பூநாத் நிறுவனத்தின் இயக்குநரைச் சமாதானப்படுத்தி, அவர் உட்பட ஆசிரியர்களின் பயன்பாட்டிற்காக நிறுவனம் சார்பாக 3 PCXT-களை வாங்கி இருந்தார். ஆனால் வாங்கி இருந்த மூன்று PCXT-கள் நெடுநாள்களாகியும் பயன்பாட்டிற்கு வரவில்லை என்பதை யோசித்துக் கொண்டிருந்தார். அவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு வங்கியில் PCXT அடிப்படையிலான கணினிப் பயிற்சி மையத்தை உருவாக்கினார், இது நாட்டின் வங்கித் துறையில் முதல்கணினிப் பயிற்சி மையமாகும். நிறுவனத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கணினி மையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது அதற்காக அவர் ஒரு கிலோமீட்டர் நடந்து மூன்று மாடிகள் ஏறிக் கணினியில் வேலை செய்யவேண்டி இருந்தது.

இவ்வாறு வகுப்புகளுக்கு இடைப்பட்ட இடைவேளையின் போது செய்யக் கூடிய 30 நிமிட வேலைக்காக இரண்டு மணி நேரத்தைச் செலவிட வேண்டியிருந்தது. 50 வயதைத் தாண்டிய பேராசிரியர் ஜம்பூநாத் இதனால் மிகவும் சோர்வடைந்தார். தவிரக் கணினி மையத்தின் தலைவர், ஆசிரிய உதவிக்குக்கூட கணினியைப் பயன்படுத்துவதற்குக் கீழ்நிலைப் பணியாளர்கன் (தட்டச்சாளர்கள், ஸ்டெனோகிரா ஃபர்கள்) போன்றவர்களை அனுமதிக்கத் தயங்கினார். பேராசிரியர் ஜம்பூநாத் போன்ற மிகக்குறைவான நபர்களே பாடப் பொருள்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தியதால் அவர் எதிர் கொள்ளும் பிரச்சினையை மற்ற சகாக்கள் புரிந்து கொள்ளவில்லை. பேராசிரியர். ஜம்பூநாத் சராசரி ஆசிரியச் சுமையைவிடக் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமான கற்பித்தல் சுமையைக் கொண்டிருந்தார், இது அவருக்குக் கணினி மைய வசதிகளைப் பயன்படுத்துவதற்குச் சிறிய வாய்ப்பைக் கொடுத்தது.

MES-இன் தலைமைப் பொறியாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று இந்நிறுவனத்தில் திட்ட மேலாளராகச் சமீபத்தில் பொறுப்பேற்றுக் கொண்ட திட்ட மேலாளர் திரு.விக்ரம் அவர்களின் அலுவலகத்தில் நுழைந்தார் பேராசிரியர் ஜம்பூநாத். விக்ரமும் அவரும் நல்ல நண்பர்களாகத் திகழ்ந்தனர் மற்றும் விக்ரம் விடுமுறையில் இருந்த பொழுது தேவைக்கேற்பப் பேராசிரியர் -ஜம்பூநாத் இயக்குநரின் வேண்டுகோளின் படித் திட்ட மேலாண்மையில் உதவி செய்ததால் அவர்களுக்குள் நல்ல புரிதல் இருந்தது பின்வருபவை அவர்களுக்கிடையே நடந்த உரையாடல்.

*பேராசிரியர்.ஜே.:* “காலை வணக்கம் மிஸ்டர் விக்ரம். மூன்று மாதங்களுக்கு முன்பு வாங்கிய பிசி எக்ஸ்டிக்களை நிறுவி இயக்குவதற்கான கணினி அறையை ஜூலை முதல் வாரத்தில் ஒப்படைப்பதில் என்ன தாமதம்?

ஜூலை முதல் வாரத்திலேயே நாம் கணினிகளை வாங்கி விட்டோம். இப்பொழுது அக்டோபர் 10-ஆம் தேதி ஆகிவிட்டது. இருந்தும், கணினிகள் பயன்பாட்டுக்கு வராமல் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

அறையில் பெயின்டிங் வேலைகள் நீண்டகாலத்திற்கு முன்பே செய்யப்பட்டதை நான் அறிவேன், மேலும் ஏர்கண்டிஷனர்கூடக் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பே பொருத்தப்பட்டிருக்கிறது.”

*திரு.விக்ரம்:* “பேராசிரியர் ஜே. இப்பொழுது இந்தப் பணியை முடிப்பதற்கு அதிக நாள்கள் ஆகாது சிறிதளவு பணியே மீதியுள்ளதால் நவம்பர் முதல் வாரத்தில் நாங்கள் பணியை முடித்து உங்கள் பயன்பாட்டிற்காக ஒப்படைத்து விடுவோம்.”

*பேராசிரியர்.ஜே.:* “செய்ய வேண்டியது என்ன? எல்லாம் முடிந்ததை நான் காண்கிறேன்."

*திரு.விக்ரம்:* "பாதுகாப்புக்காக மின்னல் அரெஸ்டரைப் பொருத்த வேண்டும்.”.

*பேராசிரியர்.ஜே.:* "அதற்கு என்ன தேவை.”?

*மிஸ்டர்.விக்ரம்:* "நாம் ஒரு குழியை உருவாக்கி, அதில் மின்னல் அரெஸ்டரை பொருத்த வேண்டும்.”

*பேராசிரியர்.ஜே.:* “குழி எவ்வளவு பெரியது. இது 1அ*1அ அல்லது 3அ*3அ. இது 1 அடிஆழமா அல்லது 10 அடியா?

*திரு.விக்ரம்:* “அடடா, இது 1.5*1.5 *2 அடிகள்அளவுதான்”.

*பேராசிரியர்.ஜே.:* “லைட்டனிங் அரெஸ்டர் எப்படி? இறக்குமதி செய்யப்பட்டதா அல்லது உள்நாட்டில் கிடைக்கிறதா?”

*திரு.விக்ரம்:* "இது உள்ளூரில் கிடைக்கும்".

*பேராசிரியர்.ஜே.:* "எத்தனை தூரம்? விமான நிலையத்திற்கு அருகில் (20 கிமீதொலைவில்) அல்லது ஒரு கிமீ அருகில் சொல்லுங்கள்?"

*மிஸ்டர் விக்ரம்:* “இல்லை. இல்லை. அத்னை தூரம் இல்லை. இது ஐந்து கிமீ தொலைவில் உள்ள பிரதான சந்தையில் கிடைக்கும்”.

*பேராசிரியர்.ஜே.:* “எத்தனை செலவு ஆகும்? அது லட்சமா ஆயிரமா?”

*மிஸ்டர்.விக்ரம் :* "இதற்கு வெறும் 500 ரூபாய் தான் செலவாகும்”.

*பேராசிரியர் ஜே.:* “ஐயா, உங்களுக்கு ஓட்டுநருடன் கூடிய ஜீப் வழங்கப்பட்டுள்ளது மற்றும் உங்களுக்கு ரூபாய் 2000 வரை எந்த அனுமதியும் இல்லாமல் செலவு செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ஓட்டுநரிடம் பணத்தைக் கொடுத்து மின்னல் அரெஸ்டரை வாங்கிவரச் சொல்லுங்கள். நமது நிறுவனத்தின் மூலையில் ஏராளமான தொழிலாளர்கள் ஒவ்வொரு நாள் காலையிலும் நின்று போக்குவரத்து நெரிசலை உருவாக்குகின்றனர் அவர்களில் ஒரு தொழிலாளியை அரைநாளுக்கு ரூபாய் இருபது விதத்தில் பணி அமர்த்துங்கள், அவர் பிற்பகல் உணவு நேரத்திற்குள் வேலையை முடித்து விடுவார். பிற்பகலுக்கு மேல் வயரிங் வேலை செய்யப்பட்டு மற்ற அனைத்து வேலைகளையும் மாலைக்குள் முடித்து விடலாம். நாளை கணினியைச் சப்ளை செய்தவர் கணினிகளை நிறுவி விடுவார், மேலும் நாளை மறுநாள் PCXT-க்களை நான் பயன்படுத்தலாம்”.

*திரு.விக்ரம்:* “என்னைக் கேலி செய்யாதீர்கள், வேலை முடிக்கப்பட்டு விடும்.”

ஆச்சரியத்தின் ஆச்சரியம். மூன்றாம் நாள் வேலை முடிந்தது. பேராசிரியர் ஜம்பூநாத் மட்டுமல்லர். மற்ற ஆசிரியர்களும் கணினி மையத்தைப் பயன்படுத்தத் தொடங்கினர். உதாரணமாக, MIS-இன் மூத்த பேராசிரியர் சிங் ஒர் ஆய்வுக்கட்டுரையின் 25 பக்கக் கையெழுத்துப் பிரதியுடன் MIS மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்தார். 25 பக்கங்கள் கொண்ட தமது ஆய்வுக் கட்டுரையின் கையெழுத்துப் பிரதியை எப்படித் தட்டச்சு செய்வது என்று யோசித்துக் கொண்டு இருந்தார். பேராசிரியர் ஜம்பூநாத் அவரைச் சாஃப்ட் காப்பி மற்றும் பிரிண்ட்அவுட் இரண்டையும் எடுத்துச் செல்லுமாறு பரிந்துரைத்தார். அவர் மாநாட்டிற்குச் செல்ல இரண்டு நாள்கள் மட்டுமே இருந்ததால் அது சாத்தியப்படுமா? என்று யோசித்தார்.

எனினும், பேராசிரியர் ஜம்புநாத் அவரை வற்புறுத்தி அவரது கையெழுத்துப் பிரதியை அலுவலக உதவியாளரான திரு பிரவீனிடம் கொடுக்குமாறு பரிந்துரைத்தார் பிரவீனுக்குப் பேராசிரியர் ஜம்புநாத் வேர்ட் ஸ்டார் மென்பொருள் குறித்த அடிப்படைகளை அறிமுகப்படுத்தியிருந்தார். மறுநாள் பிரவீன் மிகச்சிறப்பாக 25 பக்கங்களைத் தட்டச்சுச் செய்து பேராசிரியர் சிங்கிடம் கொடுத்த பொழுது அவர் இன்ப அதிர்ச்சி அடைந்தார். மெல்ல மெல்ல மற்ற ஊழியர்களும் கணினியைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டனர்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அவரது நிறுவனம் எம்பிஏ படிப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை நான்கு தங்களில் 30-லிருந்து 100-ஆக அதிகரித்தது, அந்தச்சமயத்தில் அவர்களுக்குக் கணினியின் பயன்பாடு மிக உதவியாக இருந்தது.

இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, டாக்டர் ஜம்பூநாத், ஒரு சகோதரி நிறுவனத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட இயக்குநரிடம் கதையை விவரித்தார், தாமதம், அதற்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகளைப் பற்றி அவர் ஆச்சரியப்பட்டார். “உண்மையில் விஷயங்கள் மாறிவிட்டனவா?” என்று டாக்டர் ஜம்பூநாத், கேலி செய்தார்.